**செய்தி வெளியீடு எண்: 740** **நாள்: 08.06.2024**

**தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தென்மேற்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, நீர்நிலைகளில் தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தென்மேற்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, நீர்நிலைகளில் தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை இன்று (08.06.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட லஸ் சர்ச் சாலையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் ரூ.1.50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மழைநீர் வடிகால் 2200 மீ. நீளத்தில் முரேஸ் கேட் சாலையிலிருந்து லஸ் சர்ச் சாலை மற்றும் கட்சேரி சாலை வழியாக பக்கிங்ஹாம் கால்வாய் வரை 2200 மீ. நீளத்தில் 2.40 மீ x 2.80 மீ அளவில் வளைவு வடிகால் அமைக்கப்பட்டு வருகிறது. அண்ணா சாலை, கேத்தட்ரல் கார்டன் தெரு, டி.டி.கே. சாலை, எல்லையம்மன் காலனி, வீனஸ் காலனி, கஸ்தூரி ரங்கன் தெரு உள்ளிட்ட தெருக்களில் உள்ள மழைநீர் வடிந்து செல்வதற்கு அமைக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக, வார்டு–118, வீனஸ் காலனியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்களில் நீர் சீராகச் செல்வதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, தேனாம்பேட்டை மண்டலம், மாம்பலம் கால்வாயில் சீர்மிகு நகரத் திட்ட நிதியின் கீழ் ரூ.59.42 கோடி மதிப்பில் 3065 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளில் அன்பு காலனி பகுதியில் தாமஸ் நகர் 2வது தெரு முதல் குளக்கரை சாலை வரை இரு கரைகளிலும் 487 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள வெள்ளத் தடுப்புச் சுவர், அங்குள்ள சிதலமடைந்த இரண்டு நடைமேம்பாலங்களை இடித்து புதியதாக ரூ.11.70 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள இரண்டு நடைமேம்பாலங்களையும், மாம்பாலம் கால்வாயில் ரோபொடிக் எக்ஸ்கவேட்டர் இயந்திரம் பயன்படுத்தி ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றும் பணியினையும் தலைமைச் செயலாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், மழைநீர் தடையின்றி செல்வதற்கு தேங்கியுள்ள கழிவுகள், ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்களை உடனடியாக அகற்றி, அகற்றப்படும் கழிவுகளை அவ்வப்போது அப்புறப்படுத்திட அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, இராயபுரம் மண்டலம், வார்டு–61, பூந்தமல்லி பிரதான சாலையில் காந்தி இர்வின் பாலம் சாலை அருகில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் தென்னக இரயில்வே துறையின் சார்பில் ரூ.5.50 கோடி மதிப்பில் 386 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினையும், லேங்ஸ் கார்டன் சாலை, மதுரவாயல்–துறைமுகம் புறவழிச்சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆரம்பக்கட்ட சாலை அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அண்ணாநகர் மண்டலம், வார்டு–99க்குட்பட்ட ராஜா அண்ணாமலை சாலை மற்றும் அழகப்பா சாலை சந்திப்பில் ரூ.18 இலட்சம் மதிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகாலினை நெடுஞ்சாலைத்துறை மழைநீர் வடிகாலுடன் இணைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பருவமழைக்கு முன்னதாக பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட கங்காதீஸ்வரர் கோயில் குளத்தில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், ரூ.1.15 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, வார்டு–98க்குட்பட்ட அயனாவரம் சாலையில் 1.2 மீ x 1.2 மீ. அளவில் 1664 மீ நீளத்தில் ரூ.7.27 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், அண்ணாநகர் மண்டலம், வார்டு–94க்குட்பட்ட வில்லிவாக்கம் ஏரியில் கூடுதலாக ரூ.7.90 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வில்லிவாக்கம் குளம் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, அதிகாரிகளுக்கு மழைநீர் வடிகால்கள் மற்றும் நீர்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

**பின்னர் செய்தியாளர் சந்திப்பில் தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்ததாவது :**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் 1,242 கி.மீ. நீளத்தில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. மழைநீர் வடிகாலின் மீதமுள்ள நீளத்தில் தூர்வாரும் பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டார். மேலும், மாநகராட்சிக்குட்பட்ட 87,719 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் இதுவரை 37,023 எண்ணிக்கையிலான வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் வண்டல்கள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து, கோவளம் வடிநிலப் பகுதிகளில் 158 கி.மீ, நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில், 116 கி.மீ.

நீளத்தில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதிகளில் 760 கி.மீ, நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில், 553 கி.மீ. நீளத்தில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மழைநீர் வடிகாலுடன் சேர்ந்து, பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகளை பார்வையிட்டு மழைக்காலங்களில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தென்னக இரயில்வே துறை உள்ளிட்ட துறைகளுடன் இணைந்து பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, அனைத்து துறைகளின் தொடர்புடைய அலுவலர்களும் விரைந்து பணியாற்றுமாறு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுகளின்போது, கூடுதல் தலைமைச் செயலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.சித்திக், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு) தலைமைப் பொறியாளர் (பொது) திரு.எஸ். ராஜேந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in